Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

08.02.2021

## தி.மலை சண்முகா கல்லூரியில் முதலாமாண்டு நேரடி வகுப்புகள் தொடக்கவிழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு நேரடி வகுப்புகள் தொடக்கவிழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். கல்லூரியின் தலைவர் **ஜி.புல்லையா** தலைமை தாங்கினார். செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** முன்னிலையுரையாற்றினார். கல்லூரியின் பொருளாளர் **எம்.சீனுவாசன்** நன்றியுரையாற்றினார். இவ்விழாவில் அறக்கட்டளை உறுப்பினர்கள் **ஏ.அருணாசலம், ஏ.சாந்தகுமார்,** திருமதி **ஏ.கஸ்தூரி அம்மாள்,** திருமதி **டி.கே.பி.கலைமணி அம்மாள்,** திருமதி **எஸ்.தமிழரசி அம்மாள்** திருமதி **சி.சசிகலா அம்மாள்** மற்றும் கல்விப்புல முதன்மையர் **பேரா.அழ.உடைப்பன்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்த்துறைத் தலைவர் **இரா.சங்கர்** நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார்.

அரசின் நிலையான வழிகாட்டுதலின்படி உரிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் இன்று முதல் நேரடி வகுப்புகள் தொடங்கியுள்ளன. மாணவ, மாணவியர் சமூக இடைவெளியுடன் குழுவாக இருக்காமல் வகுப்பறைகளில் அமர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. பேருந்தில் பயணிக்கும் போதும் வகுப்பறைக்குள்ளும் முகக்கவசம் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. கல்லூரியில் இயங்கும் சிற்றுண்டியகத்திற்குச் செல்லும் போதும் மாணவர்கள் பாதுகாப்புடன் செல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இன்று நேரடியாக வகுப்புகளில் கலந்து கொண்டுள்ள மாணவ, மாணவியருக்கு இதுவரை இணைய வழியில் வகுப்புகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில் புதிதாக முதலாமாண்டில் சேர்ந்துள்ள மாணவ, மாணவியரும், பெற்றோர்களும், உறவினர்களும் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினைத் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

செயலர் மற்றும் தாளாளர்


அறிவியல் கல்லூரி
நேரடி வகுப்புகள்
தொடக்கவிழா
நாள் : 08.02.2021 திங்கட்கிழமை

